# நூலகச் செய்தி

## இலங்கைத் தேசிய நூலக சேவைகள் சபை

மலர் 1.  இதழ் 1.  ஜனவரி - மார்ச்சு 1973

உள்ளுறை

நிர்வாக அமைப்பு

மாண்புமிகு கல்வி அமைச்சரின் ஆசிச் செய்தி

எமது பணிகள்

சபைத் தலைவரின் ஆசிச் செய்தி

நூலக அபிவிருத்தித் திட்டம் - 1973 (பொது நூலகங்கள்)

இ.தே.நூ.சே.சபை: தரும நிதி பெற அங்கீகாரம் பெற்ற நிறுவனம்

இலங்கையில் நூலகக் கல்வி வசதிகள் - 1973

ஸ்ரீலங்காவில் பொது நூலக சேவைகள் - டபிள்யூ.இ.வி. த அல்விஸ்

பாடசாலை நூலகம் - கலாநிதி பி. உடகம

ஒன்றிணைந்த நூலகர்களின் சேவை

கண்டி மாவட்ட கிராமிய நூலக முன்னோடித்திட்டம்

முக்கிய சம்பவங்களும் நடவடிக்கைகளும்

நூலக அபிவிருத்தித் திட்டம் - 1973 (பாடசாலை நூலகங்கள்)

இலங்கைத் தேசிய நூலக சேவைகள் சபை

நிர்வாக அமைப்பு – 1973

தலைமைக் காரியாலயம்

முகவரி: 10, செல்சி கார்டன்ஸ், கொழும்பு 3.

தொலைபேசி: தலைவர் – 24908 நெறியாளர் – 24909

தலைவர் திரு. டபிள்யூ. எம். ஏ. வர்ணசூரிய (பிரதமக் காரியாதிகாரி) நெறியாளர், இலங்கைத்தேசிய நூலக சேவைகள் : திரு. கே. டி. சோமதாஸ (சபைக்காரியதரிசி) ; உதவி நெறியாளர் ; (நூலகசேவைகள்) எஸ். எம். கமால்தீன்.

பிரதேசக்காரியாலயம் (மத்தியப் பிரதேசம்)

முகவரி: இலங்கைக் காப்புறுதிக் கட்டிடம் (முதல்மாடி) 23 1/5, தளதா வீதி, கண்டி. தொலைபேசி: 7582 (கண்டி)

உதவிநெறியாளர் (நூலகசேவைகள்) திருமதி. கே. எல். பண்டிதரத்ன (தற்காலப் பிரதேசக் காரியாலயப் பொறுப்பாளர்)

சபையின் அதிகாரங்கள்

1970ம் ஆண்டின் 17ம் இலக்க இலங்கைத் தேசிய நூலக சேவைகள் சபைச் சட்டத்தின் 14ம் பிரிவில் இச்சபையின் அதிகாரங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் பிரதானமானவை சபையின் பொறுப்புக்கள் பற்றிய கொள்கை நிர்ணயமும், அவற்றோடு தொடர்பான நிதிக்கட்டுப்பாடுமாகும்.

நூலகசபை

சபையில் பின்வருவோர் அங்கத்துவம் வகிக்கிறார்கள். திரு. டபிள்யூ. எம். ஏ. வர்ணசூரிய, தலைவர் (இளைப்பாறிய பதில் கல்வி நெறியாளர் நாயகமும், கல்வித்திட்டமிடல் நெறியாளரும்) திரு. டபிள்யூ. இ. வி. த அல்விஸ் (உள்ளூராட்சி ஆணையாளர்) ; திரு. டங்கன் டபிள்யூ த அல்விஸ் (கொழும்பு மாவட்ட அரசாங்க அதிபர்) ; திரு. ஜே. டபிள்யூ. சுபசிங்ஹ (அத்துவக்காத்து, முடிக்குரிய வழக்கறிஞர், இளைப்பாறிய உயர் நீதிமன்றப் பதிவாளர்) ; கலாநிதி. ஆர். ஏ. எச். வீரக்கோன் (நெறியாளர், இலங்கை விஞ்ஞான தொழிற்றுறை ஆராய்ச்சி நிலையம்) ; திரு. எம். எம். பஹாவுதீன் (வர்த்தகர், சமூகசேவையாளர்) ; திரு. எஸ். யூ. சோமசேகரம் (இளைப்பாறிய உதவிக் கல்வி நெறியாளர், சமூகசேவையாளர்) ; திரு. யூ. டி. ஜ. சிறிசேன* (பதில் கல்வி நெறியாளர் நாயகம்) ; திரு. எச். ஏ. ஐ. குணதிலக்க (நூலகர், இலங்கைப் பல்கலைக்கழகம், பேராதனை வளாகம்)

திரு. கே. டி. சோமதாஸ – நெறியாளர், இ. தே. நூ. சே. சபை, சபைக் காரியதரிசி (முன்னைநாள் நூலகர், இலங்கைப் பல்கலைக்கழகம், பேராதனை)

(* 28.12.71 முதல் திரு. ஆர். பாஸ்கரலிங்கத்திற்குப் பதிலாக)

கல்வி அமைச்சர் அல்உறாஜ் கலாநிதி பதியுதீன்
<u>மஉற்மூத் அவர்களின் ஆசிச் செய்தி</u>

இலங்கைத் தேசீய நூலகச் சேவைகள் சபை தனது சொந்த நடவடிக்கைகளையும், மற்றும் இலங்கையிலும் பிறநாடுகளிலும் நூலக, நூலகவியற்றுறைகளில் ஏற்பட்டுவரும் வளர்ச்சி பற்றிய செய்திகளையும் அறிவித்தற்கேதுவாக "நூலகச் செய்தி" என்ற வெளியீட்டை ஆரம்பித்துள்ளமை பற்றி நான் மகிழ்ச்சியடைகிறேன்.

எந்தவொரு தேசீய அபிவிருத்தித் திட்டத்தையும் வெற்றிகரமாக இயக்குவதற்கு மக்கள் விடயஞானமுடையவர்களாயிருத்தல் இன்றியமையாததாகும். வெகுசன அறிவுச் சாதனங்களுக்கு உறுதுணையாகவும், அறிவுத்துறைகளனைத்தையும் அளாவியனவாகவும் தேசீய அடிப்படையிலமைந்த நூலக, ஆவண சேவைகள், அறிவார்ந்த மக்களை உருவாக்கப் பெருமளவில் உதவுவதோடு, கல்வியின் பயனைப் பெருக்கவும் உறுதுணையாய் நிற்கும்.

இந்தச் சேவையை ஆற்றும் வழிகளுள் இலங்கைத் தேசீய நூலக சேவைகள் சபை ஆரம்பித்துள்ள "நூலகச்செய்தி" எனும் வெளியீடும் ஒன்றாகும்.

இச்சபையின் முயற்சிகள் வெற்றிபெற எனது ஆசிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(கையொப்பம்) பதியுதீன் மஃறமூத்
கல்வி அமைச்சர்.

16.3.1973.

## எமது பணிகள்

இலங்கையில் தேசிய நூலக சேவைகள் சபைச் சட்டம் (இலக்கம் 17-1970) இச்சபைக்குப் பின்வரும் அதிகாரங்களை வழங்கியுள்ளது:-

(அ) பொதுவாக நூலகச் சேவைகளின் அமைப்பியல், அபிவிருத்தி ஆகியவற்றிற்கான திட்டமிடலும், உதவிபுரிதலும்;

(ஆ) இலங்கைத் தேசிய நூலகத்தை நிறுவிப் பேணுதல்;

(இ) பொது நூலகச் சேவைகளை ஊக்குவித்து அபிவிருத்தி செய்வதில் ஆலோசனை கூறி உதவி புரிதல்;

(ஈ) பாடசாலை நூலகங்களை ஊக்குவித்து அபிவிருத்தி செய்வதில் ஆலோசனை கூறி உதவி புரிதல்;

(உ) நூல் வெளியீட்டிற்கும், கட்புல செவிப்புல சாதன உற்பத்திக்குமான ஆலோசனை கூறி உதவி புரிதல்;

(ஊ) பல்கலைக்கழக நூலகங்கள், கனிஷ்ட பல்கலைக்கழக நூலகங்கள், தொழில் நுட்பக் கல்லூரி நூலகங்கள், ஆசிரிய கல்லூரி நூலகங்கள், உள்ளூராட்சிமன்ற நூலகசேவைகள், அரசாங்கத் திணைக்கள நூலகங்கள், சிறப்பு நூலகங்கள் என்பனவற்றை ஒருமுகப்படுத்துவதிலும், அபிவிருத்தி செய்வதிலும் ஆலோசனைகூறி உதவிபுரிதல்;

(எ) நூலகத்துறையில் பணியாற்றுவோருக்கான குறைந்த பட்ச பொதுக் கல்வித் தகைமை, தொழிற்றுறைத் தகைமை ஆகியவற்றை நிர்ணயிப்பதில் அரசினருக்கு ஆலோசனையும் உதவியுமளித்தல்;

(ஏ) நூலகக் கல்வி, நூலகப்பயிற்சி ஆகியவற்றை ஊக்கி வளர்த்தல்;

(ஒ) பொதுவாக நூலக சேவைகளின் முன்னேற்றத்திற்கு அவசியமான ஏனைய பணிகளையும் மேற்கொள்ளுதல்.

## தலைவரின் ஆசிச் செய்தி

யுனெஸ்கோ நெறியாளர் நாயகத்தின் அதிகாரத்தின் கீழ் 1967ம் ஆண்டு டிஸம்பர் மாதம், ஆசியாவில் நூலக சேவைகளைத் தேசிய அடிப்படையில் திட்டமிடுதல் பற்றிய நூலக நிபுணர்களின் கூட்டமொன்று கொழும்பில் நடைபெற்றது. இக்கூட்டத்தின் நோக்கம் "தென்கிழக்கு ஆசியாவில் தற்போதுள்ள நூலக, ஆவண சேவைகளின் நிலையையும், கல்வி, சமூக, பொருளாதாரத்துறைகளின் அபிவிருத்தியில் அவற்றின் பங்கையும் பரிசீலனை செய்து, நூலக, ஆவண சேவைகளைத் திட்டமிடுதற்கான அடிப்படையை நிர்ணயிப்பதும், தனியாகவும் கூட்டாகவும் இவ்வடிப்படையின் மீது ஆசிய நாடுகளில் செயலாற்றுதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்வதுமேயாகும்". இக்கூட்டம் இலங்கை அரசாங்கத்தின் ஒத்துழைப்போடு நடத்தப்பட்டது.

இக்கூட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட திட்டமிடற் கொள்கையின் அடிப்படையில் இலங்கையில் நூலக ஆவண சேவைகளின் அபிவிருத்திக்கான திட்டமொன்று சபையோரால் விவாதிக்கப்பட்டு, இலங்கை அரசினரின் ஆலோசனைக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. இத்திட்டம் தமது நூலக ஆவண சேவைகளை அபிவிருத்தி செய்யவிழையும் ஆசிய நாடுகளுக்கொரு மாதிரித் திட்டமாகக் கணிக்கப்பட்டது. இவ்வாறு சமர்ப்பிக்கப்பட்ட திட்டத்தை இலங்கை அரசாங்கம் ஏற்று 1970ம் ஆண்டு மே மாதத்தில் இதற்கான சட்டத்தை இயற்றியது. நூலக அபிவிருத்தித் திட்டத்தை செயற்படுத்துவதற்கு அவசியமான அமைப்பை ஏற்படுத்துவதே இச்சட்டத்தின் இலக்காகும்.

நூலக நடவடிக்கைகளோடு நேரடித்தொடர்புடைய பல்வேறு துறைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒன்பது அங்கத்தவர்களைக்கொண்ட ஒரு சபை நியமிக்கப்பட்டது. மற்றும் இச்சபைக்கு ஒரு முழுநேரத் தலைவரும் நூலக சேவைகள் நெறியாளரும் நியமிக்கப்பட்டனர். இச்சபையின் தலைமைக்காரியாலயம் கொழும்பில் அமைக்கப்பட்டுள்ளது. சபையின் கடமைகளும் சேவைகளும் விரிவடைவதற்கேற்பப் பிரதேசக் காரியாலயங்கள் அமைக்கப்படவுள்ளது. இவ்வகையில் 1972ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் கண்டியிலொரு பிரதேசக் காரியாலயம் நிறுவப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கையால் இலங்கை அரசாங்கம் இந்நாட்டின் நூலக சேவைகளைத் தேசிய அடிப்படையில் திட்டமிட முற்பட்டுள்ளது. இது உண்மையில் நாட்டின் சமூக, பொருளாதாரத் திட்டமிடலில் அடங்கும் கல்வித்திட்டமிடலின் ஒரு சிறப்பம்சமேயாகும். நூலகசேவைகளைத் திட்டமிடுதலென்பது வளர்ந்தோர்கல்வி உட்பட எல்லா மட்டங்களிலும் கல்விப் பிரச்சனைகளையும், நூலகத் தேவைகளின் வழியமைந்த விஞ்ஞான ரீதியிலான ஆய்வுப் பிரச்சனைகளையும் தொடர்ச்சியாகவும் கிரமமாகவும் கண்டறிவதும், இவ்வகையில் அடைவதற்கான இலக்குகளை ஏற்படுத்திக்கொண்டு அவற்றை எய்துவதற்கு நாட்டின் மூலவளங்களை நியாயமானவகையில் உபயோகிப்பதுமேயாகும். எமது நூலகசேவைகள் சபையின் பணி இதுவாகவேயிருக்கும்.

எமது நாட்டில் கல்வி நிலையங்களிலும், அரசாங்கத்திணைக்களங்களிலும், கூட்டுத்தாபனங்களிலும், உள்ளூராட்சி நிறுவனங்களிலும் ஏதாவதொருவகையான நூலகங்கள் இருந்தே வந்துள்ளன. இவற்றை தனித்தனியாகக் கருதுமிடத்து ஒரு சில நூலகங்களைத் தவிர ஏனைய நூலகங்களெல்லாம் மிகவும் பின்தங்கிய நிலையில்தான் இருந்துவந்துள்ளன. இவை நாட்டில் பெருகிவரும் கல்வியறிவுபடைத்த மக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்யக் கூடியனவாக அமையவில்லை. சிறப்பாக விஞ்ஞான அறிவு பெற்றவர்களின் தேவைகளுக்கு ஏற்றவையாக இந்நூலகங்கள் வளரவில்லை. எனவே தற்காலத் தேவைகளுக்கு ஏற்றவகையில் இந்நூலகங்களின் இலக்கிய வளத்தைப் பெருக்கி, கூட்டு முயற்சியினாலும், நூலகத் தொழிற்றுறையிலாற்றுப்படுத்தலினாலும், வளர்ந்து வரும் வாசகர் வட்டத்திற்கு உதவியளிப்பதே இலங்கைத் தேசிய நூலக சேவைகள் சபையின் பணியாகும். இதனை வேறுவிதமாகக் கூறுவதாயின்இதுகாறும் இயக்கமின்றி, வரையறுக்கப்பட்டும், மேல்தளத்தினரை மட்டும் சார்ந்தும் நடைபெற்றுவந்த நூலகசேவைகள் பரவலாக்கப்பட்டு, உயிரோட்டமுள்ளதாக்கப்படும். 1970ம் ஆண்டு மே மாதம் நிறுவப்பட்ட இ.தே.நூ.சே.சபையின் நோக்கங்கள் இவ்வகையிலேயே அமைந்துள்ளன.

நூலகச் சபை தற்போது வெளியிடும் "நூலகச் செய்தி"யின் மூலமே இலங்கையிலும், வெளிநாடுகளிலுமுள்ள மக்களுக்குத் தனது நடவடிக்கைகளையும் தனது நோக்கங்களை அது எவ்வாறு அடைய முயல்கிறது என்பதையும் அறிவிக்க விழைகின்றது. மேலும் எமது சொந்தப்பிரச்சனைகளோடு தொடர்பான அயல் நாட்டுச்செய்திகளும் அவசியமானவிடத்து "நூலகச்செய்தியில்" இடம்பெறும். சிறப்பாக இலங்கை நூலகர்களிடையே சுமுகமான உறவை வளர்ப்பதற்கு இவ்வேடு சிறந்ததொரு சாதனமாக அமையுமென்பது எமது சபையின் நம்பிக்கையாகும்.

நூலகச் சபையின் தலைவரென்ற முறையில் இச்செய்திக் கடிதத்தை வாசகர்களுக்கு அறிமுகப்படுத்துவதும் எமது நூலகர்கள் இதனை நன்கு பயன்படுத்திக்கொள்ள முன்வருமாறு அழைப்பதும் எனக்கு மகிழ்ச்சி தரும் கடமைகளாகும். இதனை முடிப்பதற்கு முன்னர் எமது வாசகர்களின் கவனத்திற்கு, முன்னைநாள் யுனெஸ்கோ நூலக, ஆவண, சுவடிச்சேவைகளின் நெறியாளர் திரு. சி. வி. பென்ன அவர்களின் பின்வரும் கருத்துரையைக் கொண்டுவர விரும்புகின்றேன். அவரது கருத்துரை ஒரு நாட்டின் சமூக, பொருளாதார அபிவிருத்திக்குத் தேசீய அடிப்படையிலான நூலக சேவை எவ்வளவு இன்றியமையாததென்பதை ஆணித்தரமாக எடுத்து விளக்குகின்றது. சிறப்பாக அபிவிருத்தியடைந்துவரும் ஒரு நாட்டிற்கு தேசீய நூலக சேவையின் முக்கியத்துவம் நாம் கூறாமலே விளங்கும்:-

> "தேசீய பல்கலைக்கழக நூலகங்கள் ஒரு நாட்டின் புலமைக்கு அளவுகோலாயின், பொது நூலகங்கள் அதன் பொதுவான பண்பாட்டிற்கு அளவுகோலாகும். புலமையும் பண்பாடும் தேசீய வளத்தின் பெறுமதிவாய்ந்த ஊற்றுக்களாகும். இக்காரணத்தையொட்டியே சமூக, பொருளாதார அபிவிருத்தியை ஊக்கும் ஒவ்வொரு ஆக்கத்திட்டத்திலும், கல்வித்திட்டத்திலும், ஒருவரின் கல்வியும், பயிற்சியும் அத்தியாவசியமானவையெனக் கொள்ளப்படுகிறது. அறிவாற்றலும், பண்பாடும் வாய்ந்த மக்களை உருவாக்குவதற்கு அவசியமானவற்றுள் பயன்மிக்க கல்வித்திட்டமுமொன்றாகும். அத்தகைய திட்டத்தின் இயக்கத்திற்கு கிரமமான வாசினைப் பழக்கம் அவசியமாகும். அவ்வாறு வாசிப்பதற்கு நூல்கள் இன்றியமையாதனவென்பது நாம் கூறாமலே விளங்கும். சகல மக்களும் வாசித்துப் பயன் பெறுவதாயின் நூலகங்கள் அத்தியாவசியமாகும். நூலகங்களின்றித் தகுதிவாய்ந்த ஆரம்பப் பாடசாலைகளோ, உயர்நிலைப் பாடசாலைகளோ, பல்கலைக்கழகங்களோ இருக்கமுடியாது. மேலும் வளர்ந்தோருக்கு அறிவூட்டக்கூடிய வாய்ப்பும் கிட்டமாட்டாது"
>
> தேசீய கல்வித் திட்டத்தோடு இணைந்து அதன்வழி சமூக, பொருளாதார வளர்ச்சித்திட்டங்களோடு ஒருமித்துத் திறமையாக இயங்கும் ஒரு நூலக அமைப்பு கல்விக்காகவும் ஆராய்ச்சிக்காகவும் செலவிடப்படும் நிதிகள் தக்க பயனை அளிக்குமென்பதற்கோர் உத்தரவாதமாகும். எனவே நூலகங்களுக்காகச் செலவிடப்படும் நிதி, கல்விக்காகச் செலவிடப்படும் நிதியைப்போன்று ஒரு மூலதனமென்று கருதப்படவேண்டுமேயன்றி, நுகர்வுப்பொருட்களின் மீது செலவிடப்படும் நிதியாகக் கருதப்படக் கூடாது." (1)

(கையொப்பம்) டபிள்யூ. எம். ஏ. வர்ணசூரிய

தலைவர்

இ. தே. நூ. சே. ச.

(1) சி. வி. பென்ன, நூலக சேவைகளைத் திட்டமிடல், பாரிஸ், யுனெஸ்கோ, 1967.

## நூலக அபிவிருத்தித் திட்டம் – 1973

கண்டி, மாத்தளை, கேகாலை, ஆகிய மாவட்டங்களில் 1972ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட முன்னோடித் திட்டத்துடன் இலங்கையின் பொது நூலகங்கள், பாடசாலை நூலகங்கள், சங்கம நூலகங்கள் முதலியவற்றை உள்ளடக்கிய தேசீய அடிப்படையிலான ஒரு முகப்படுத்தப்பட்ட நூலக சேவையொன்றினை நிறுவும் நூலக சபையின் முயற்சிகள் ஆரம்பமாயின. சபையின் இந்த அபிவிருத்தித் திட்டம் அடுத்து வரும் ஐந்து ஆண்டு காலத்தில் இந்நாட்டின் பிற பாகங்களுக்கும் விஸ்தரிக்கப்படும். இந்த விஸ்தரிப்புத் திட்டப்படிக்கு 1973 ம் ஆண்டில் காலி, அநுராதபுரம், அம்பாறை–கல்முனை ஆகிய மாவட்டங்கள் சிறப்பாக அபிவிருத்தி செய்யப்படும். அதே வேளையில் நாட்டின் ஏனைய பகுதிகளில் தாமாகவே அபிவிருத்தி முயற்சிகளை மேற்கொள்ளும் நூலகங்களுக்கும் அவசியமானவிடத்து நூலக சபை உதவியளிக்கும்.

1973ம் ஆண்டில் அபிவிருத்தி செய்வதற்கெனத் தெரிவு செய்யப்பட்டுள்ள மூன்று மாவட்டங்களிலும் சனப்பெருக்கமும் விரிவான விவசாய அபிவிருத்தியும் ஏற்பட்டுள்ளபோதிலும் அவற்றின் தேவைக்கு ஏற்ற நூலக வசதிகள் கிடையாது. எனவே இம்மாவட்டங்களில் பொது நூலகங்களை எவ்வாறு முன்னேற்றலாம் என்பது பற்றி நூலக சபை உள்ளூராட்சிப் பகுதியினருடன் கூட்டாலோசனை நடத்தியுள்ளது. இவ்வாலோசனைகளின் அடிப்படையில் ஒவ்வொரு தேர்தற் தொகுதியிலும் ஒரு பொது நூலகத்தை மாதிரி நூலகமாக அபிவிருத்தி செய்வதே சிறந்த வழியென்றுகருதப் பட்டது. ஒவ்வொரு தேர்தற் தொகுதிக்குமான நூலகத்தை அவ்வத்தொகுதி நாடாளுமன்ற அங்கத்தவருடன் கலந்து உதவி உள்ளூராட்சி ஆணையாளர் முதற்கண் தெரிவுசெய்வார். இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட பொது நூலகங்கள் உள்ளூராட்சி ஆணையாளரால் இறுதியாக நிர்ணயிக்கப்பட்டபின் நூலகசபையின் கவனத்திற்கும் உதவிக்கும் சிபார்சு செய்யப்படும்.

இவ்வாறு தெரிவுசெய்யப்பட்ட நூலகங்களுக்கு கட்டிடம், தளபாடம் ஆகியவற்றிற்கான செலவினங்களுக்காக சுமார் ரூ. 200,000 நிதி உதவி செய்ய உள்ளூராட்சிப் பகுதியினர் நடவடிக்கையெடுத்து வருகின்றனர். அதே வேளையில் நூலக்சபை இந்த நூலகங்களுக்கு நூல்களைக்கொடுத்து உதவுவதோடு இந் நூலகங்களிலே கடமையாற்றும் பணியாளருக்குப் பயிற்சி அளிக்கவும் முன்வந்துள்ளது. ஒவ்வொரு உள்ளூராட்சி உதவி ஆணையாளரும் அபிவிருத்தித் திட்டத்திற்குட்பட்ட நூலகங்களைப் பிரதேச வாரியாக ஒருமுகப்படுத்தி இந் நூலகங்களின் சேவைகளை மேலும் விரிவு படுத்துவர். இந்த முயற்சி, ஒவ்வொரு தேர்தற் தொகுதியிலுமுள்ள சனசமூக நிலையங்களின் மூலம் நூற்பெட்டிகளை விநியோகிக்கும் வகையில் அமையும். இந்த நூற்பெட்டிச் சேவை அவ்வப்பகுதி உள்ளூராட்சி மன்றங்களின் பொறுப்பில் நடைபெறும்.

அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் 1973ம் ஆண்டு ஜனவரி மாதம் 31ம் திகதி அம்பாறையில் ஒரு புதிய பொது நூலகத்தை நிறுவினார். இந்நூலகம் உள்ளூராட்சி அமைச்சின் பதில் அமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இந்நூலகத்திற்கு ரூ. 3000 பெறுமதியுள்ள நூல்களை நூலகச் சபை கொடுத்துதவியது. மேலும் இந்நூலகத்தின் நூலகருக்குப் பயிற்சியுமளித்தது. கல்லோயாப் பள்ளத்தாக்கில் உள்ளூராட்சி நிறுவனங்கள் இன்னும் செயற்படாமையால் இப்பகுதியில் அரசாங்க அதிபரே பொறுப்பேற்று நடத்தி வருகிறார்.

அநுராதபுர மாவட்டத்தில் மதவாச்சிய, கஉறட்டகஸ்திகிலிய ஆகிய இடங்களில் இரண்டு பொது நூலகங்கள் நிறுவப்பட்டுள்ளன. இம்மாவட்டத்தையடுத்துள்ள வவுனியா நகரில் இத்தீவிலுள்ள மிகவும் சிறந்த பொது நூலகக் கட்டிடங்களில் ஒன்று ரூ. 100,000 க்கும் மேலதிகமான செலவில் நிறுவப்பட்டுள்ளது. கடந்த ஆண்டில் வவுனியா நகரசபை இந்நூலகத்திற்கான நூல்களை வாங்குவதற்காக ரூ. 25,000 ஒதுக்கியுள்ளது. நூலக அபிவிருத்திக்

கென அநுராதபுர மாவட்டத்தோடு வவுனியா மாவட்டமும் தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. அநுராதபுரத்தில் ரூ. 400,000கும் மேலதிகமான செலவில் நிறுவப்பட்டுவரும் பொது நூலகக் கட்டிடத்தை இவ்வாண்டின் இறுதிக்குள் பூர்த்திசெய்யுமாறு நூலக சபை அநுராதபுரப் புனித நகர பாதுகாப்புச் சபையிடம் கேட்டுக் கொண்டுள்ளது. இக்கட்டிடவேலை பூர்த்தியானதும் தற்போது பழைய நகரத்தில் இடவசதியற்ற கட்டிடமொன்றில் இயங்கிவரும் பாதுகாப்புச் சபையின் பொது நூலகம் இக்கட்டிடத்திற்கு மாற்றப்படும். நூலகச் சபை அநுராதபுரப் புனித நகரப் பாதுகாப்புச் சபையுடன் கூட்டாக இந்தப் புதிய நூலகத்தை மாவட்ட மத்திய நூலகமாக அபிவிருத்தி செய்து வடமேற்கு மாகாணம் முழுவதற்குமே நூல் இரவல் வழங்கும் ஒரு திட்டத்தை இந்நூலகத்தின் மூலம் செயற்படுத்த எண்ணியுள்ளது.

---

<u>உள்நாட்டு வருமானவரிச் சட்டம் – 1963ம் ஆண்டின்</u>

<u>4ம் இலக்கச் சட்டத்தின் 16 ஏ. பிரிவின் கீழானஅறிக்கை.</u>

நிதி அமைச்சர், நாணயக்கார பத்திரகே மார்ட்டின் பெரேரா ஆகிய நான், 1969ம் ஆண்டின் 6ம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்ட 1963ம் ஆண்டின் 4ம் இலக்க உள்நாட்டு வருமானவரிச் சட்டத்தின் 16 ஏ. பிரிவினால் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படிக்கு, இந்த அறிக்கையின் மூலம் இலங்கைத் தேசிய நூலக சேவைகள் சபையை அச்சட்டத்தின் நோக்கத்திற்காக ஓர் அங்கீகரிக்கப்பட்ட நிதியாகப் பிரகடனஞ் செய்கின்றேன்.

என். எம். பெரேரா
நிதி அமைச்சர்.

கொழும்பு 17, டிஸம்பர் 1971.

அரசாங்க 'கஸட்' அறிக்கை இலக்கம் 14991 (30.12.71).

# இலங்கைத் தேசிய நூலகச் சேவைகள் சபை

## அறிவித்தல்

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் தமது 1971ம் ஆண்டு டிசம்பர் மாதம் 17ம் திகதியிட்ட 12-1092 இலக்க அறிக்கையின் மூலம் இலங்கைத் தேசிய நூலக சேவைகள் சபை, உள்நாட்டு வருமானவரிச் சட்டத்தின் 16(ஏ) பிரிவின் கீழ் ஓர் அங்கீகரிக்கப்பட்ட தரும நிறுவனமென்று பொது மக்களுக்கு அறிவித்துள்ளார். இவ்வறிக்கை 1971ம் ஆண்டு டிசம்பர் மாதம் 30ம் திகதிய 14991 இலக்க இலங்கை அரசாங்க கஸட்டில் பிரசுரிக்கப் பட்டுள்ளது.

இத்தகைய தரும நிறுவனமொன்றிற்குத் தமது பணத்திலிருந்து அல்லது சொத்திலிருந்து நன்கொடையளிப்பவருக்கு உள்நாட்டு வருமான வரியிலிருந்து பின்வரும் வரிச் சலுகைகள் கிட்டும்:-

(1) ரூ.500/-க்கு மேற்பட்ட பெறுமதியுள்ள நன்கொடையை வழங்கும் ஒருவர் வழங்கிய தொகையில் பாதி அல்லது வரிக்கு மதிப்பிடும் தொகையில் 1/20 பாகத்திற்கு நேரான தொகை அல்லது ரூ. 25,000/- ஆகியவற்றுள் எது குறைவான தொகையோ அத்தொகை அவருடைய வரிக்கு மதிப்பிடும் தொகையிலிருந்து கழிக்கப்பட்ட பின்னரே வருமானவரி விதிக்கப்படும்.

(11) சபைக்கு வழங்கப்படும் நன்கொடை ரூ.1000/-க்கு மேற் பட்டதாயின் அத்தொகைக்கு வருமானவரிச் சட்டத்தின், நன் கொடை வரிப்பிரிவு 41(1)ல் இருந்து விலக்களிக்கப்படும்.

(-அங்கீகரிக்கப்பட்டதொரு தரும நிதிக்கு ஒருவர் தமது ஆயுட் காலத்தில் அளிக்கக்கூடிய ஆகக் கூடிய தொகை ரூ. 300,000/- ஆகக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது)

சபைக்கு நன்கொடையளிக்க விரும்புகிறவர்கள் தமது பணத்தை அல்லது காசோலையை அல்லது கொடைப் பத்திரத்தை இ.தே.நூ.சே. சபைத் தலைவருக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். அனுப்பவேண்டிய முகவரி, தலைவர், இ.தே.நூ.சே.சபை, 10, செல்ஸி கார்டன்ஸ், கொழும்பு 3.

இவ்வாறு அளிக்கப்படும் நன்கொடைக்கு அங்கீகரித்தற் பத்திர மொன்று சபைத் தலைவரால் வழங்கப்படும். கொடையாளி தமது வருடாந்த வருமான விபரங்களை உள்நாட்டு வருமானவரி ஆணையாளருக்கு அனுப்பும் போது இவ்வங்கீகரித்தற் பத்திரத்தையும் சமர்ப்பித்தால் மேலே கூறப்பட்ட வரிச்சலுகைகளுக்கு உரிமையுடையவராவர்.

டபிள்யூ. எம். ஏ. வர்ணசூரிய,

தலைவர்.

10, செல்ஸி கார்டன்ஸ்,
கொழும்பு 3.

## இலங்கையில் நூலகக் கல்வி வசதிகள் – 1973

இந்நாட்டில் நூலகக் கல்விக்கு ஊக்கமளித்து அபிவிருத்தி செய்வது நூலகச் சபையின் கடமைகளுள் ஒன்றாகும். எனவே இத்துறையில் சபை மிகுந்த கவனஞ் செலுத்தி வந்துள்ளது. நூலக, ஆவண, சேவைகளில், அடிப்படை, இடைநிலை உயர்நிலை ஆகிய மட்டங்களில் பயிற்சி வசதிகளை ஏற்படுத்துவதே சபையின் நோக்கமாகும்.

* * * *

1961ம் ஆண்டில் இலங்கை நூலக சபை தனது அங்கத்தவர்களுக்கான பயிற்சித்திட்டத்தை ஆரம்பித்தது. இச்சங்கத்தினால் ஆண்டுதோறும் இரண்டு பரீட்சைகள் நடத்தப்படுகின்றன. 1961ம் ஆண்டுமுதல் இ. நூ. ச. முதலாம் பரீட்சையும் 1966ம் ஆண்டு முதல் இடைநிலைப் பரீட்சையும் நடந்து வருகின்றன. இவ்வாண்டில் இறுதிப் பரீட்சைக்கான வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இது சம்பந்தமான மேலதிக விபரங்களைப் பின்வரும் முகவரிக்கெழுதிப் பெற்றுக் கொள்ளலாம். கல்வி அதிகாரி, ஸ்ரீலங்கா நூலக சங்கம், இலங்கைப் பல்கலைக் கழகம், தபால்பெட்டி இலக்கம் 1698. கொழும்பு 7.

* * * *

இலங்கைப் பல்கலைக்கழகம் 1961ம் ஆண்டில் பட்டதாரிகளுக்கான நூலகவியல் 'டிப்ளோமா' பாடத்திட்டமொன்றை ஆரம்பித்தது. போதிய விரிவுரையாளர்கள் கிட்டாமையால், 1965ம் ஆண்டில், இத்திட்டம் கைவிடப்பட்டது. 1972ம் ஆண்டில் நூலக சபையின் வேண்டுகோளின் மீது இலங்கைப்பல்கலைக்கழகம், இந்நாட்டின் நூலக சேவைகளில் பணியாற்ற அவசியமானவோர்களின் எண்ணிக்கையை மனத்திற் கொண்டு பட்டப் படிப்பு நிலையிலும், பட்டதாரிகள் நிலையிலுமான பாடத்திட்டங்களை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. பல்கலைக்கழகத்து நூலகவியற் பகுதி அவசியமான விரிவுரையாளர்களை நியமித்தவுடன் இப்பாடத்திட்டங்கள் ஆரம்பமாகுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

* * * *

முன்னைய கனிஷ்ட பல்கலைக்கழகங்கள் நடத்தி வந்த இடைநிலை நூலகவியல் "டிப்ளோமா" ஈராண்டுப் பாடத் திட்டம் நிதி வசதியும், விரிவுரையாளர்களும் கிட்டியவுடன் அரசாங்கப் "பொலிடெக்னிக்" கல்லூரிகளில் மீண்டும் தொடர்ந்து நடைபெறும். இருந்தபோதிலும் ஆசிரிய பயிற்சிக் கல்லூரிகளில் கல்வி 1 அல்லது கல்வி 11 பிரிவில் "பாடசாலை நூலக நிர்வாகம்" எனும் பாடத்தைச் சேர்ப்பதற்கான முயற்சிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் மூலம் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் பாடசாலை நூலகத்தைக் கற்பித்தலில் திறம்படப் பயன்படுத்தக்கூடியவர்களாகவும் அவசியமாயின் கனிஷ்ட வித்தியாலயங்களில் ஆசிரிய நூலகர்களாகக் கடமை புரியக் கூடியவர்களாகவும் திகழ்வார்கள்.

* * * *

அரசாங்க நூலகர்களினதும், உள்ளூராட்சிமன்ற நூலகர்களினதும் தொழிற் சங்கங்கள் கடந்த சில காலமாகத் தங்களது தொழிற்றுறையிலான பரீட்சைகளுக்குத் தோற்றுவதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதில் சம்பந்தப்பட்டவர்கள் உரிய கவனஞ் செலுத்தவேண்டுமென்று வற்புறுத்தி வந்துள்ளன. தற்போதுள்ள விதிகளினால் தங்களுடைய பதவி உயர்வுகள் தடைப்பட்டு வருவதாக அவர்கள் முறையிட்டுள்ளனர்.

* * * *

இலங்கையிலுள்ள பல தூதுவரகங்கள் நூலகவியற் கல்வி வளர்ச்சிக்காக, நூலகசபை, கல்விஅமைச்சு, இலங்கைப் பல்கலைக்கழகம் ஆகியவற்றிற்கு கணிசமான அளவு உதவியளித்துள்ளன. சிறப்பாக பிரிட்டிஷ் கவுன்சிலும், அமெரிக்கத் தகவல் நிலையமும் இந்நாட்டில் நூலகப் பயிற்சித் திட்டங்களை நடத்துவதற்காக நூலகச்சபைக்கும் பல்கலைக்கழகத்திற்கும், விரிவுரையாளர்களின் உதவியை வழங்க முன்வந்துள்ளன. யுனெஸ்கோவின் நூலக, ஆவண, சுவடிப்பிரிவும் நூலகப் பயிற்சித் திட்டங்களுக்கு உதவியளிக்க எப்போதும் ஆயத்தமாயிருப்பதாக அறிவித்துள்ளது. இந்நிறுவனம் நூலகத்திட்டங்களுக்கான உபகரணங்களையும் உதவ ஆயத்தமாகவுள்ளது. பிரிட்டிஷ் கவுன்சிலின் சிபார்சின் பேரில் வெளிநாட்டு அபிவிருத்தி நிர்வாகம் (Overseas Development Administration) நூலகச்சபைக்கு நூலக, ஆவண சேவைகள் பற்றி 200 நூல்களை அன்பளிப்புச் செய்துள்ளது.

## ஸ்ரீலங்காவில் பொது நூலக சேவைகள்

இ.வி.எஸ் - த - அல்விஸ்
(உள்ளூராட்சி ஆணையாளர்)

ஸ்ரீலங்காவின் பண்டைக்கால நிலைபற்றிய வரலாற்று நூல்களில் பலவிடங்களில் பொது நூலகங்கள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நூலகங்கள் பெரும்பாலும் ஆலயங்களில்தான் காணப்பட்டன. அண்மைக்கால வரலாற்றை நோக்குமிடத்து, 1813ம் ஆண்டில் நிறுவப்பட்ட ஐக்கிய சேவைகள் நூலகம் (United Services Library) மிகப் பழமையானதெனலாம். இதற்குச் சில ஆண்டுகளுக்குப் பின் கொழும்புப் புறக்கோட்டை நூலகம் (Colombo Pettah Library) நிறுவப்பட்டது. இவ்விரு நூலகங்களையும் 1925ம் ஆண்டில் ஒன்றிணைந்தே தற்போதுள்ள கொழும்புப் பொது நூலகம் உருவாக்கப்பட்டது.

இன்று, பொது நூலகங்களை அமைத்து நிர்வகிப்பது உள்ளூராட்சி மன்றங்களின் நிர்ப்பந்திக்கப்படாததோரு கடமையாகவுள்ளது. இந்நாட்டிலுள்ள 674 உள்ளூராட்சி மன்றங்களுள் 496 மன்றங்கள் பொது நூலகங்களை நடத்தி வருகின்றன. இவையனைத்தும் நவீன நூலக அமைப்பிற்கிணங்க இயங்கிவரும் தகைமை வாய்ந்த நூலகங்கள் என்று நாம் கூற முடியாது. இன்னும் எவ்விதமான நூலக வசதியையும் ஏற்படுத்தாத உள்ளூராட்சி மன்றங்கள் 178 இருந்து வருகின்றன.

மாநகரசபைகள் மீதும், நகர சபைகள் மீதும் நூலகங்களை நிறுவி நடத்துவதைக் கட்டாயக் கடமையாக்குவதற்கு ஏதுவாகச் சட்டத் திருத்தம் செய்வதற்கு உள்ளூராட்சி அமைச்சு ஆலோசனை செய்து வருகின்றது. இத்தகைய சட்டம் காலக்கிரமத்தில் பட்டினசபை, கிராமசபை ஆகியவற்றிற்கும் விஸ்தரிக்கப்படும்.

ஐந்தாண்டு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் உள்ளூராட்சிப் பகுதி பின்தங்கிய 178 பிரதேசங்களில் நூலகக் கட்டிடங்களை நிறுவுவதற்குத் திட்டமிட்டுள்ளது. மேலும் இத்திட்டத்தின் கீழ் தற்போதுள்ள கட்டிடங்களை அபிவிருத்தி செய்வதற்கும் நூற்தொகையைக் கணிசமான அளவு பெருக்குவதற்கும் நூலகர்களைப் பயிற்றுவிப்பதற்கும் திட்டமிட்டுள்ளது. 1973ம் ஆண்டில் ஆரம்பமாகும் இந்த அபிவிருத்தித் திட்டத்திற்கு ஆண்டுதோறும் ரூ. 500,000/- செலவிடப்படும்.

ஒருசில பொது நூலகங்களில் ஆவண நிலையங்கள் (Documentation Centres) அமைக்கப்படுமென்று நம்பப்படுகிறது. இந்நிலையங்கள் அரசாங்க அதிகாரிகளுக்கும், பொது மக்களுக்கும் பல துறைகள் பற்றிய தகவல்களை வழங்கும். சிறப்பாக விவசாயத்துறையிலும், தொழிற்துறையிலும் இந்நிலையங்கள் கவனம் செலுத்தும்.

"யுனெஸ்கோ" நிறுவனத்தின் ஆதரவுடன் கண்டிப்பிரதேசத்தில் ஆரம்பிக்கப்பட்ட முன்னோடித்திட்டம் (Pilot Project) பற்றி இங்கு விசேடமாகக் குறிப்பிடவேண்டும். இத்திட்டத்தின் கீழ் கண்டிப்பிரதேசத்திலுள்ள பதினைந்து உள்ளூராட்சிமன்றப் பகுதிகளில் ஒருமுகப்படுத்தப்பட்ட பொது நூலகங்களின் சேவை ஏற்படுத்தப்படும். இவற்றோடிணைந்த நூற்பெட்டிச் (Book Box) சேவையும் ஆரம்பிக்கப்படும்.

பொது நூலக சேவைகளின் விரிவிற்கும் அபிவிருத்திக்குமான ஆலோசனைகளையும் உதவிகளையும் வழங்குவது 1970ம் ஆண்டில் நிறுவப்பட்ட தேசிய நூலக சேவைகள் சபையின் கடமைகளுள் ஒன்றாகும்.

நூலகவியற் கல்வியையும், பயிற்சியையும் வளர்த்து முன்னேற்றுவது இச்சபையின் மற்றுமொரு கடமையாகும். இச்சபை ஏற்கனவே கண்டிப்பிரதேச முன்னோடித் திட்டத்தில் மிகவும் மும்முரமாக ஈடுபட்டுவருகிறது. பொது நூலகத்துறையில் இச்சபையின் மீது சார்ந்துள்ள இரு கடமைகளையும் நிறைவேற்ற உள்ளூராட்சி அதிகாரப் பீடங்கள் சபைக்கு எல்லா வகைகளிலும் தங்களது ஒத்துழைப்பை வழங்கும்.

## பொது நூலகங்கள்

| | உள்ளூராட்சிமன்றங்களின் தொகை | நூலகசேவை வழங்கும் மன்றங்கள் | நூலகசேவை வழங்காத மன்றங்கள் |
|---|---|---|---|
| மாநகர சபைகள் | 12 | 12 | 0 |
| நகர சபைகள் | 36 | 34 | 2 |
| பட்டின சபைகள் | 86 | 75 | 11 |
| கிராமச் சபைகள் | 540 | 375 | 165 |
| | 674 | 496 | 178 |

### 1971 - 72 உத்தேசச் செலவினங்கள் - உள்ளூராட்சிப் பகுதி.

உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு வழங்கும் நிதி:

பொது நூலகங்கள் ரூ. 300,000

(1) நூலகக் கட்டிடங்களுக்கு ரூ. 180,000

(2) நூல்கள், பருவஏடுகள் ரூ. 120,000

ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றத்திற்கும் நூல்கள், பருவ ஏடுகளுக்காக:-

நகர சபைகள் ரூ. 700/-
பட்டினசபைகள் ரூ. 500/-
கிராம சபைகள் ரூ. 170/-

### 1973 - உத்தேசச் செலவினங்கள் - உள்ளூராட்சிப் பகுதி:-

உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு வழங்கும் நிதி:

பொது நூலகங்கள் ரூ. 500,000

(1) நூலகக் கட்டிடங்கள் ரூ. 200,000

(2) நூல்களும், பருவஏடுகளும் ரூ. 110,000

(3) அநுராதபுரம், காலி, அம்பாறை-கல்முனை-மாவட்டத் திட்டங்களுக்கான விசேஷ நிதி: ரூ. 190,000

## பாடசாலை நூலகம்

கலாநிதி பி. உடகம
(காரியதரிசி, கல்வி அமைச்சு)

கல்வியின் தற்கால நோக்கம் 'கற்பதற்குக் கற்பதாயின்' ('to learn to learn') எமது கற்பித்தல் திட்டங்களையும், உபகரணங்களையும் பற்றி நாம் புனராலோசனை செய்ய வேண்டியது அவசியமாகும். எந்தவொரு கல்வியமைப்பினையும் கட்டுப்படுத்துவது நிதி நிலையேயாகும். சிறப்பாக, வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் கல்வி வசதிகளைக் கட்டுப்படுத்துவதாயுள்ளது நிதிநிலையே. இலங்கையின் வருவாயில் பெருமளவு கல்விக்காகச் செலவிடப்பட்டபோதும் எமது கல்விப் பிரச்சினைகள் பலவாகவும், வசதிகள் குறைவாகவுமேயுள்ளது.

எமது கல்விப் புனரமைப்பு முயற்சிகள் பலவற்றிலும் பாடசாலை நூலகங்கள் மீதும் கவனஞ் செலுத்தப்பட்டே வந்துள்ளது. எனினும் பிள்ளையின் கல்விப் பயிற்சி அர்த்த புஷ்டியுள்ளதாகவும் அப்பிள்ளை வாழும் சமூகத்தோடு தொடர்புள்ளதாகவுமிருக்கவேண்டுமாயின் பாடசாலை நூலகம் பற்றிய எமது மனப்பான்மைமாற வேண்டும்.

நூல்களைப் பாதுகாத்து வைத்துக் குறிப்பிட்ட ஒரு சிலரின் உபயோகத்திற்கு மட்டும் வழங்கி வந்த முற்கால நூலகங்களைப் போல் எமது பாடசாலை நூலகங்களும் "நூற் பாதுகாப்புக் கூடங்களாக" மட்டும் இருந்துவரமுடியாது. பாடசாலை நூலகம் கல்விப் பயிற்சிக்கொரு மத்திய தலமாயிருத்தல் வேண்டும். அது எமது மாணவருக்கான மத்திய பணிமனையாகவுமிருத்தல் வேண்டும். கல்விப் பயிற்சியில் தனித்துவம் பேணப்படவேண்டுமாயின், நூலகத்தின் பணிக்குப் பாடவிதானத்தில் சிறப்பிடம் வழங்கவேண்டும். தமிழிலும் சிங்களத்திலும் பள்ளிப் பிள்ளைகளுக்கான நூல் வளங்குன்றியதொரு நிலையில் நூலகங்களின் பணி இன்றியமையாததாகும்.

பாடசாலை நூலகரும் ஆசிரியரும் எமது பிள்ளைகள் புதிய நூல்களை அறிந்து நயக்கவும், அறிவுச்சாதனங்களைத் தெளியவும் வழிகாட்டி உதவவேண்டும். மாறாக, ஆசிரியர் களைப்படைந்த விடத்துப் பிள்ளைகள் மௌனமாய் வாசிப்பதற்கான ஓரிடமாகப் பாடசாலை நூலகம் இருத்தல் கூடாது. கற்பதற்கொரு மத்திய தலமென்ற வகையில் நூலகம் மாணவர்களைக் கவரவேண்டும். நூல்களைப்பெறவும், அறிவுத்தோட்டத்திற்கான உதவிகளைப் பெறவும் கூடியதோரிடமாக நூலகம் திகழவேண்டும்.

சில ஆண்டுகளுக்கு முன் ஐக்கிய அமெரிக்காவில் நடத்தப்பட்டதொரு மதிப்பீட்டின் மூலம் பாடசாலை மாணவர்களில் முக்கால்வாசிப் பேர் பாடசாலை நூலகத்தை விடப் பொது நூலகத்தையே விரும்பி உபயோகிப்பதாக அறியமுடிந்தது. இதற்குக் காரணம் பொது நூலகங்களின் கூடுதலான நூல் வளமும், வசீகரிப்புத் தன்மையுமாயிருத்தல் வேண்டும். மேலும், பொது நூலகங்களில் வாசகர்கள் கூடுதலாக உதவிபெறக் கூடியதும் ஒரு காரணமாகலாம்.

ஆசிரியர் தமது கற்பித்தற் திட்டத்திற்கான சாதனங்களைப் பெறும் மத்திய தலமாகவும் நூலகம் இருத்தல் வேண்டும். பாடவிதானச் சாதனத்தலமாக ஒரு நூலகமியங்குதற்குப் பலருடைய உதவியும் ஒத்துழைப்பும் அவசியமாகும்.

தகைமை வாய்ந்ததொரு நூலகரின் பராமரிப்பில் திறம்பட அமைக்கப்பட்ட ஒரு நூலகம் ஆற்றக்கூடிய பணிகள் பலவாகும். அத்தகைய நூலகம் பிள்ளைகளுக்கு மாறாத இன்பத்தைக் கொடுக்கும். அறிவூட்டக்கூடிய நூல்கள் சஞ்சிகைகள் முதலியவற்றை வழங்கிப் பிள்ளைகளின் நூலார்வத்தைப் பெருக்குவதோடு புதப்புதுக் கருத்துக்களையும் அப்பிள்ளைகளிடையே பரப்பும், கல்விப் பயிற்சியை உயிரோட்டமுள்ளதொரு முயற்சியாக்கும். இவ்வாறு பயனளிக்குமொரு நூலகத்தை அமைப்பது பாடசாலைத் தலைமை ஆசிரியர், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோருடைய உற்சாகத்திலும், உழைப்பிலுமே தங்கியுள்ளது. மாணவர்களின் பணியில் சிறப்புறும் ஒரு நூலகம் கற்பதற்கொரு கேந்திரத்தானமாகுமென்பதில் ஐயமில்லை.

## ஒன்றிணைந்த நூலகர் சேவை

இலங்கையில், அரசாங்க அலுவலகங்களிலும், கூட்டுத்தாபனங்களிலும், உள்ளூராட்சி நிறுவனங்களிலும், கல்வி நிலையங்களிலும் நூலகங்களின் சேவைகளுக்கு ஏற்பட்டுவரும் முக்கியத்துவத்தையும், நூலகர்களைத் தெரிவு செய்வதில் கோரப்படும் தகைமைகளிலும், அவர்களுக்கு வழங்கப்படும் வேதனங்களிலும் காணப்படும் வேறுபாடுகளையும் உத்தேசித்து, தேசிய நூலக சபை தற்போதுள்ள நிலையைப் பற்றிப் பூர்வாங்க மதிப்பீடொன்றை மேற்கொண்டுள்ளது. நூலகர் சேவையில் திருப்திகரமான ஒரு நிலையை ஏற்படுத்துவதே சபையின் நோக்கமாகும்: இந்நாட்டில் நூலக சேவைகளின் முன்னேற்றத்திற்குத் திறமையும், மனநிறைவுமுள்ள நூலகர் சமூகமொன்றை உருவாக்கவேண்டியது அத்தியாவசியமென்று சபை கருதுகின்றது.

* * * *

இவ்வகையில் செயலாற்ற, நூலகர் தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகள் உட்பட்ட விசேஷ குழுவொன்று அண்மையில் சபையினால் நியமிக்கப்பட்டது. இக்குழுவினர் தற்போதுள்ள நூலகர் சேவை நிலையைப் பரிசீலனை செய்து, அபிவிருத்திக்கான ஆலோசனைகளை வழங்குமாறு சபையினால் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். இவ்வாலோசனைகள் சபையினால் மறு பரிசீலனை செய்யப்பட்டு அரசினர்க்குச் சமர்ப்பிக்கப்படும்.

* * * *

இக்குழுவினர் நூலகர் சேவை நிலைபற்றி விரிவாக ஆராய்ந்து சபைக்கு ஓர் அறிக்கையைச் சமர்ப்பித்தனர். இவ்வறிக்கை மேலும் பரிசீலனைசெய்யப்பட வேண்டுமென்று சபை கருதியது. எனவே சபையினர், இவ்வறிக்கையைப் பரிசீலனை செய்து அதிலுள்ள ஆலோசனைகளையும் இணைத்துப் பொருத்தமானதொரு சேவைத் திட்டம் பற்றிய அறிக்கையை தமக்குச் சமர்ப்பிக்குமாறு சபைத் தலைவரைப் பணித்துள்ளனர். அவ்வாறு தயாரிக்கப்படும் அறிக்கையைச் சபை ஆராய்ந்து முடிவில் அரசினருக்குச் சமர்ப்பிக்கும்.

* * * *

தற்போது பரிசீலனை செய்யப்பட்டுவரும் திட்டத்தின் பிரதான நோக்கங்கள் பின்வருமாறு:-

(அ) ஒன்றிணைக்கப்பட்ட நூலகர் சேவையொன்றினை ஏற்படுத்தும் முகமாகக் கூடுமான அளவு பொதுவான வேதனத்திட்டத்தையும், தொழிற் தகைமைகளையும் ஏற்படுத்துதல்.

(ஆ) நூலகங்களை அவற்றின் நூல்வளம், சேவைகள் ஆகியவற்றின் அடிப்படையில் தரப்படுத்துதல்.

(இ) சேவையிலுள்ள நூலகர்களுக்கு உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் தொழிற் பயிற்சியும், தகைமையும் பெறுதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தல்.

## கிராமப்புற நூலகங்கள்

## கண்டி மாவட்ட முன்னோடித் திட்டம்

உள்ளூராட்சித் திணைக்களம், கல்வித் திணைக்களம் ஆகியவற்றின் அநுசரணையுடன் இலங்கைத் தேசிய நூலக சேவைகள் சபை, 1972ம் ஆண்டு மே மாதத்தில் கிராமப்புற நூலகத் திட்டமொன்றைக் கண்டி மாவட்டத்தில் ஆரம்பித்து வைத்தது.

இருபத்தொரு பொது நூலகங்களும், இருபத்துநான்கு பாடசாலை நூலகங்களுமாக, நாற்பத்தைந்து நூலகங்கள் இந்தத் திட்டத்தில் இடம் பெற்றன. இந் நூலகங்களைத் தெரிவு செய்வதில் ஒவ்வொரு தேர்தற் தொகுதியிலுமிருந்தும் குறைந்த பட்சம் ஒரு பொது நூலகமும் ஒரு பாடசாலை நூலகமும் சேர்க்கப்பட வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது.

இத்திட்டத்திற்கான மூலதனம் மத்திய அரசினால் வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் " யுனெஸ்கோ " நிறுவனமும் நூல்கள், நூலக உபகரணங்கள் ஆகிய வகைகளில் கணிசமான அளவு உதவியளித்துள்ளது. மற்றும் கண்டிக் கிராமாபிவிருத்திக் கமிஷன் சில பொது நூலகக் கட்டிடங்களை நிறுவுதற்கான நிதியை உதவியுள்ளது.

இலங்கையில் பெரும்பாலான கிராமப்புற நூலகங்கள் மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ளன. எனவே இக்கிராமப்புற நூலகங்களை அபிவிருத்தி செய்யவேண்டிய அவசரத் தேவையை உணர்ந்து இலங்கைத் தேசிய நூலக சேவைகள் சபை, கண்டி மாவட்டத்தில் இம்முன்னோடித் திட்டத்தை ஆரம்பித்தல் பொருத்தமெனக் கண்டது.

இம்முன்னோடித் திட்டத்தின்கீழ் அபிவிருத்தி செய்யப்படும் நூலகங்கள் அவற்றின் வாசகர்கள் ஆகக் கூடுதலான பயன்பெறத் தக்க வகையில் திருத்தியமைக்கப்படும். இந்த முயற்சியில் நூலகசபை பின்வரும் விடயங்களில்விசேஷ கவனஞ் செலுத்தும்.

(1) கிராமப்புற மக்கள் நற்பிரசைகளாவதற்கு ஏதுவாக, அவர்களுடைய ஓய்வு நேரப் போக்காக வாசிக்கும் பழக்கத்தை ஊக்குவித்தல்.

(2) கிராமப்புற மக்கள் பாடசாலைகளைவிட்டு விலகிய பின்னரும் தொடர்ந்து கல்வி பயில உதவுதல்.

(3) கிராமப்புற மக்கள் தங்கள் தொழிலறிவை விருத்திசெய்துகொள்ள உதவும் அறிவேடுகளை வழங்குதல்.

(4) கிராமத்திலும், பாடசாலையிலும் நூலகத்தையொரு சஜீவமான அறிவுச்சாதன நிலையமாக்குதல்.

இந்த நோக்கங்களை அடையும் முகமாக நூலகசபை நூற்பெட்டி விநியோக சேவையொன்றை ஆரம்பித்துள்ளது. இதன் மூலம் ஒரு கிராமத்திலிருந்து வெகு தூரத்தில் வசிப்பவர்கள் கூட நூல்களைப் பெறும் வாய்ப்பு ஏற்படும்.

சனசமூக நிலையங்களில் இயங்கும் வாசகர் வட்டங்கள் கிராம நூலகங்களில் அங்கத்துவம் பெற்று ஒரு தடவைக்கு ஐம்பதுக்கு மேற்படாத நூல்களை இரவலாகப் பெற முடியும். இந்த நூல்கள் பொது நூலகத்திலிருந்து சனசமூக நிலையங்களுக்கு நூற்பெட்டிகளில் கொண்டு செல்லப்படும். வாசகர் வட்ட அங்கத்தவர்கள் தமக்கு வேண்டிய நூல்களைச் சனசமூக நிலையங்களிலிருந்து பெற்றுக்கொள்ளமுடியும். இரு வாரங்களுக்கு அல்லது ஒரு மாதத்திற்கொருமுறை இந்நூல்களைப் பொது நூலகத்திற்குத் திருப்பிக் கொடுத்துவிட்டு வேறு நூல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

பாடசாலை நூலகங்களைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு வட்டார மத்திய நூலகத்திலிருந்தும் அதனோடு இணைக்கப்பட்ட பாடசாலைகள் தமக்கு வேண்டிய நூல்களைப் பெற்றுக்கொள்ள முடியும். இந்த நூல் விநியோகத் திட்டத்திலும் நூற் பெட்டிகள் மூலமே நூல்கள் பரிமாறப்படும்.

இந்த முன்னோடித் திட்டத்தில் கலந்துகொள்ளும் ஒவ்வொரு பாடசாலையும் நூலக சபையினால் சீரமைப்புச் செய்யப்பட்டபின், ஒரு தொகை நூல்களையும் நூலக உபகரணங்களையும் பெறும். இந்த நூலகங்களில் பணியாற்றுவோர் நூலகப் பயிற்சி பெறாதவர்களாயின் நூலகசபை அவர்களுக்குக் குறுகிய கால நூலக வேலைப் பயிற்சி அளிக்கும். இப்பயிற்சி வகுப்புக்கள் சபையின் கண்டிப் பிரதேச அலுவலகத்தில் நடைபெறும்.

சபையில் நூலக முன்னோடித் திட்டத்தில் கலந்துகொள்ளும் 45 நூலகங்களும் பின்வருமாறு பிரிக்கப்பட்டுள்ளன:-

21 பொது நூலகங்கள்

- 1 நகர சபை
- 2 பட்டினசபைகள்
- 18 கிராம சபைகள்.

24 பாடசாலை நூலகங்கள்

- 4 மத்திய மகா வித்தியாலயங்கள்
- 16 மகா வித்தியாலயங்கள்
- 4 கனிஷ்ட பாடசாலைகள்.

## செய்தித் தொகுப்பு

### யுனெஸ்கோவும் நூலக சபையும்

கொழும்பில் 1967ம் ஆண்டு டிஸம்பர் மாதத்தில் நடைபெற்ற "ஆசிய நூலக சேவைகளின் தேசியத் திட்டம்" பற்றிய நூலக நிபுணர்களின் கூட்ட இறுதி அறிக்கையைப் படித்தவர்கள், இலங்கைத் தேசீய நூலக சேவைகள் சபைச் சட்டம் இயற்றப்படுவதற்கும், நூலக சபை நிறுவப்படுவதற்கும் இவ்வறிக்கை எவ்வாறு துணை புரிந்ததென்பதை நன்குணர்வர்.

நூலகசபை தனது ஆரம்ப காலமுதல் யுனெஸ்கோ நிறுவனத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது. இலங்கையில் யுனெஸ்கோ நூலக ஆலோசகராயிருந்த செல்வி. இ.ஜே. எவன்ஸ் அவர்களும் நூலக சபைத்தலைவராயிருந்த திரு. டி.ஜீ. சுகததாஸ (1970-71) அவர்களுமே நூலகச் சட்ட மூலப் பிரதியாக்கத்திற்கான ஆரம்ப வேலைகளுக்கும், கம்பஉறாவிலுள்ள பண்டார நாயக்க மகா வித்தியாலய மாதிரி நூலகத்தின் அமைப்பிற்கும் பிரதான பொறுப்பாளிகளாவர்.

1972 மார்ச் மாதத்தில் யுனெஸ்கோ ஆவண, நூலக, நிலையங்களில் நெறியாளராகிய கலாநிதி ஓ.ஏ.மிக்கைலோவ் இலங்கை வந்து, நூலக சபையினருடனும், கல்வி அமைச்சுடனும் மற்றும் நூலக, ஆவண, சேவைகளில் ஈடுபட்டுள்ள பிற நிறுவனங்களுடனும் இரு தினங்கள் கூட்டாலோசனை நடத்தினர். மேலும் அவர் திட்டமிடல் அமைச்சின் கூட்டுக் காரியதரிசியையும் பேட்டி கண்டார். அவ்வமயம் நூலக சபைத் தலைவரும் நெறியாளரும் பிரசன்னமாயிருந்தனர்.

1972ம் ஆண்டு டிஸம்பர் மாதத்தில் யுனெஸ்கோவைச் சேர்ந்த திரு. எல். எஸ். சமரசிங்உற அவர்கள் இலங்கைக்கு வருகை தந்து நூலக சபையினருடனும், தொழிற்றுறை, விஞ்ஞான அலுவல்கள் அமைச்சுடனும், தேசீய விஞ்ஞானக் கழகத்துடனும், திட்டமிடல் அமைச்சுடனும் தேசீய விஞ்ஞான தொழில் நுட்ப ஆவண நிலையமொன்றை நிறுவுவதுபற்றிப் பேச்சுவார்த்தைகள் நடத்தினர்.

யுனெஸ்கோ நிபுணர்களின் கூட்ட இறுதி அறிக்கையின் சிபாரிசுகளில், இலங்கைத் தேசீய நூலகம் தேசீய ஆவண மத்தியத்தலமாக இயங்கவேண்டுமென்பது ஒன்றாகும். விஞ்ஞான தொழில்நுட்பத்துறைகளில் ஆவண சேவைகளை ஆரம்பிக்க வேண்டிய அவசர நிலையை உத்தேசித்து தேசிய நூல் நிலையம் நிறுவப்படும் பொழுது, அதனுடன் இத்தேசீய ஆவண நிலையத்தை இணைப்பதென்று தீர்மானிக்கப்பட்டது. தேசீய நூலகத்தை நிறுவுவது நூலக சபையின் பொறுப்பாதலின் ஏற்கனவே இதற்காக ஒரு காணியை வழங்கும்படி அரசினரிடம் சபை விண்ணப்பித்துள்ளது. மேலும் சுதந்திர சதுக்கத்தில் தேசீய சுவடிச்சாலைக்கு அருகிலேயே இக்காணியை உதவும் படியும் சபை கேட்டுக்கொண்டுள்ளது.

யுனெஸ்கோவின் 1971/72 வேலைத்திட்டத்தின் கீழ் இலங்கையில் கிராம நூலக சேவைகளின் முன்னோடித் திட்டத்தை அமுல் நடத்தும் பொறுப்பு நூலக சபையின் மீது சார்ந்துள்ளது. சபையைச் சேர்ந்த இரு சிரேஷ்ட நூலக சேவை அதிகாரிகள் குறுகிய காலப் பயிற்சி பெறுவதற்கான நிதியுதவியை யுனெஸ்கோ வழங்கியுள்ளது. சபை இப்பயிற்சிக்குத் தெரிவு செய்துள்ளவர்களுக்கு அரசினரின் அங்கீகாரத்தையும் பெற்றுள்ளது. இவ்வதிகாரிகள் முறையே இவ்வாண்டு மே மாதத்திலும், ஆகஸ்டு மாதத்திலும் பயிற்சிக்காக வெளிநாடு செல்வர்.

1972ம் ஆண்டு டிஸம்பர் மாதம் 29ம் திகதி முதல் அக்டோபர் 3ம் திகதிவரை நூலகசபை நடத்திய "இலங்கையில் நூலகங்கள்" என்ற கண்காட்சி சர்வதேசப் புத்தக ஆண்டின் இறுதிக் கட்டமாய் அமைந்தது. இக்கண்காட்சியில் ஓர் அங்கமாய்த் திகழ்ந்த தற்கால நூற்பகுதியை அமைப்பதில் நூலக சபையினருடன் இலங்கை நூல் வெளியீட்டாளர் சங்கம், கல்வி வெளியீட்டுத் திணைக்களம், கலாச்சாரத் திணைக்களம், யுனெஸ்கோ தேசீய கமிஉஷன் முதலிய நிறுவனங்களும் மற்றும் பல நிறுவனங்களும் ஒத்துழைத்தன.

பிரிட்டிஷ் கவுன்சில் ஒழுங்கு செய்த " இந்தியாவிலும் இலங்கையிலும் பாடசாலை நூலகங்களுக்கான 500 ஆங்கில நூல்களின் " காட்சியும், அமெரிக்கத் தகவல் நிலையத்தின் சர்வதேசப் புத்தக ஆண்டுக்குரிய அச்சுக்கலை நூல்களின் காட்சியும் நூலக சபையின் கண் காட்சிக்கு மெருகூட்டின.

இதுபோக பிரிட்டிஷ் கவுன்சிலுடன் இணைந்து நூலக சபை இரு நூற் காட்சிகளை நடத்தியுள்ளது. (1) இலங்கையிலும் இந்தியாவிலும் பாடசாலைகளுக்கான நூல்களும் பருவ வெளியீடுகளும், (2) நூலக வியல் நூற்கள்.

இவ்விரு நூற்காட்சிகளும் கொழும்பு, கண்டி, யாழ்ப்பாணம் ஆகிய நகரங்களிலுள்ள பொது நூலகங்களில் நடைபெற்றது.

<u>வெளிநாட்டுத் தொடர்புகள்:</u>

பங்களூரில் 1972ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் நடைபெற்ற "இந்தியாவில் பொது நூலக முறைகள்" பற்றிய கருத்தரங்கில் கலந்து கொள்ளுமாறு நூலகசபைத் தலைவருக்கும் சபை அங்கத்தவர்களுள் ஒருவரான திரு. எச். ஏ. ஐ. குணத்திலக அவர்களுக்கும், பங்களூர் ஆவண, ஆராய்ச்சிக் கழகம் அழைப்பு விடுத்திருந்தது. கொழும்புப் பொது நூலக அதிபர் திருமதி ஈஸ்வரி கொரயா அவர்களும் இக்கருத்தரங்கில் கலந்துகொண்டார்கள். இக்கருத்தரங்கில் இலங்கைப் பிரதிநிதிகள் இந் நாட்டில் நூலகச் சட்டம் இயற்றப்பட்டு நூலக சபையை நிறுவ 1969ம் ஆண்டு முதல் எடுக்கப்பட்டு வந்த முயற்சிகள் பற்றி இந்தியப் பிரதிநிதிகளுக்கு எடுத்து விளக்கினர். இலங்கைப் பிரதிநிதிகள் தம் நாடு திரும்பு முன் பேராசிரியர் எஸ். ஆர். ரங்கநாதன், கலாநிதி ஏ. நீலமேகம் ஆகியோருடன் இலங்கையின் நூலக ஆவணத் தேவைகள் பற்றிப் பேச்சு வார்த்தைகள் நடத்தினர். பங்களூர் கருத்தரங்கத்தின் அறிக்கையொன்று "பொது நூலக முறை- இந்தியா, இலங்கை, இங்கிலாந்து, ஐக்கிய அமெரிக்கா ஆகியவற்றின் நூலகச் சட்ட ஒப்பீடு" என்ற தலைப்பில் வெளியிடப் பட்டுள்ளது. இவ்வறிக்கையில் இலங்கை பற்றிய விவரங்கள் அடங்கிய அதிகாரமொன்றுள்ளது.

1972ம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் இங்கிலாந்தின் பிரிட்டிஷ் கவுன்சில் நூலகச் சபை நெறியாளர் திரு. கே. டி. சோமதாஸ அவர்களைச் ஷெஃபீல்ட் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற ஒரு பயிற்சிக் கூடத்தில் கலந்துகொள்ளும்படி அழைப்பு வழங்கியது. இப்பயிற்சி " தேச அபிவிருத்தியில் நூலகங்களின் பங்கு " பற்றியதாகும். இதில் பல ஆசிய ஆப்பிரிக்கப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

சிங்கப்பூரிலுள்ள ஆசிய வெகுசன அறிவுச் சாதன, தகவல் நிலையம் பாங்கொங்கில் இவ்வாண்டு மார்ச் மாதத்தில் நடைபெறும் பிரதேசக் கருத்தரங்கொன்றில் கலந்து கொள்ளுமாறு சபைக்கு அழைப்பு விடுத்துள்ளது. இக்கருத்தரங்கு தகவல் சேகரிப்பும் பரிவர்த்தனையும் பற்றிய தாகும். இலங்கைக்கு இக்கருத்தரங்கின் பயன் கருதிச் சபை தனது அங்கத்தவர்களுள் ஒருவரும் இலங்கைப் பல்கலைக் கழகப் பேராதனை வளாக நூலகருமான திரு. எச். ஏ. ஐ. குணத்திலக்க அவர்களை இக்கருத்தரங்கில் கலந்து கொள்வதற்குத் தெரிவு செய்துள்ளது.

## பாடசாலை நூலகங்களின் அபிவிருத்தி

எமது நாட்டிலுள்ள ஒன்பதினாயிரம் பாடசாலைகளிலுமுள்ள 2,800,000 பிள்ளைகளுக்கான நூலக சேவையை ஏற்படுத்துவதற்குத் திட்டமிடுதல் பயன்மிக்கதொரு முயற்சியாகும். ஒவ்வொரு பாடசாலையிலும் நூலகத்திற்கான கட்டிடம் இருக்குமென்று நாம் எதிர்பார்க்கமுடியாது. எனினும் எல்லாப் பிள்ளைகளுக்கும் நூலக வசதியை ஏற்படுத்திக் கொடுத்தல் சாத்தியமானதொரு காரியமேயாகும். கல்விப் பகுதியினர் இவ்வகையில் எடுத்துவரும் முயற்சிகள் ஒவ்வொரு பிள்ளைக்கும் நூலக வசதி வழங்கும் நோக்கத்தை நிறைவுபடுத்துமென்ற நம்பிக்கையை ஊட்டுவதாயுள்ளன. இவ்வழியிலான முன்னேற்றத்தை நூலகசபை வழங்கிவரும் உதவியும், ஆலோசனைகளும் துரிதப்படுத்தி வருகின்றன.

கல்வி அமைச்சின் 1973ம் ஆண்டிற்கான உத்தேச நிதி ஒதுக்கீட்டில், நூலக சபையின் ஆலோசனைக்கிணங்க "பாடசாலை நூலக அபிவிருத்தி அதிகாரியென்றதொரு பதவி இடம் பெற்றுள்ளது. இவ்வதிகாரியின் கடமைகளுள் கல்வி அமைச்சிலுள்ள பாடசாலை நூலக சேவையின் நிர்வாகமும் ஒன்றாகும். இச்சேவை, சகல பாடசாலை நூலகங்களுக்கும் வேண்டிய நூல்களை, வாங்கி ஒழுங்குபடுத்தி விநியோகம் செய்யும். மேலும் ஒவ்வொரு பிரதேசக் கல்வி நெறியாளரின் கீழும் ஒரு நூலக அதிகாரி நியமிக்கப்படுவார். இவ்வதிகாரி ஒவ்வொரு கல்விப் பிரதேசத்திலும் நூலக அபிவிருத்திக்கான முயற்சிகளில் ஈடுபடுவர்.

ஆசிரிய கலாசாலைகளுக்கும், மகாவித்தியாலயங்களுக்குமான முழுநேர நூலகர்களின் நியமனங்கள் 1972ம் ஆண்டில் அதிகரிக்கப்பட்டன. 1973ம் ஆண்டில் இப்புதிய பதவிகளுக்குப் பயிற்சிபெற்ற நூலகர்களின் பற்றாக்குறையை கல்விப் பகுதியினர் அவதானித்துள்ளனர். கனிஷ்ட பாடசாலைகளில் தொடர்ந்து ஆசிரிய நூலகர்களே கடமைபுரிவர்.

இலங்கைப் பல்கலைக்கழகத்தில் 1973ம் ஆண்டில் நூலக, ஆவணக், கல்விப் பகுதியொன்று நிறுவப்படுவது, நடுத்தர, உயர்தரப் பிரிவுகளிலான நூலகர்களின் பயிற்சிக்கு ஏதுவாக அமையும். எமது ஆசிரியகலாசாலைகளில் ஆரம்பிக்கப்படவுள்ள பாடசாலை நூலக நிர்வாகப் பயிற்சித் திட்டத்தின் மூலம் கனிஷ்ட பாடசாலைகளுக்கான நூலகர்களைப் பெறக்கூடியதாயிருக்கும். (விபரங்களுக்கு 8ம் பக்கம் பார்க்க)

கடந்த இரண்டு ஆண்டுகளாக நூலகசபை கல்விப் பகுதியினருடன் சேர்ந்து முன்னூறுக்கும் அதிகமான ஆசிரிய நூலகர்க்கான ஐந்துநாட் பயிற்சித் திட்டமொன்றை நடத்தியுள்ளது. ஒவ்வொரு பயிற்சி வகுப்பிலும் 30–40 பேர்கள் கலந்துகொண்டுள்ளார்கள். இந்தப் பயிற்சித் திட்டம் நிரந்தரமான பயிற்சிக் கூடங்கள் நிறுவப்படும்போது அக் கூடங்களில் நடைபெறும்.

நூலகசபையின் பாடசாலை நூலக அபிவிருத்தி முயற்சிகள் பிரதானமாகக் கண்டி மாவட்டத்தில் தான் நடைபெற்றுள்ளன. இப்பிரதேசத்தில் தான் சென்ற ஆண்டில் யுனெஸ்கோ நிறுவன உதவியுடன் கூடிய முன்னோடித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இங்கு பதினொரு பிராந்தியப் பாடசாலை நூலகங்கள் தம்மைச் சூழவுள்ள பாடசாலைகளுக்கு நூல்வழங்கும் பணியை மேற்கொண்டுள்ளன. நூலகசபை இவைகளுக்கு நூல்கள், உபகரணங்கள், தொழில்நுட்ப ஆலோசனைகள் ஆகியவைகளில் உதவியுள்ளது. ( 13ம் பக்கமும் பார்க்க)

நூலகசபையின் 1973ம் ஆண்டுக்குரிய வேலைத்திட்டப்படிக்கு பாடசாலை நூலக அபிவிருத்தி காலி, அநுரதபுரம், அம்பாறை–கல்முனை ஆகிய மாவட்டங்களில்தான் பெருமளவில் நடைபெறவுள்ளது. இதே மாவட்டங்கள் தான் கிராமியப் பொது நூலக அபிவிருத்திக்கும் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. ஒவ்வொரு தேர்தற் தொகுதியிலிருந்தும் ஒரு பாடசாலை நூலகம் அபிவிருத்திக்கெனத் தெரிவுசெய்யப்படும். இந்நூலகத்திற்கு நூல்களும், தொழில் நுட்ப உதவிகளும் வழங்கப்படும். ஏனைய பிரதேசங்களிலுள்ள பாடசாலைகளுக்கு சபை தனது நிதி வசதியையொட்டி உதவி வழங்கும். இத்தகு உதவி கல்வி அமைச்சு பிரதிநிதித்துவம் பெற்றுள்ள ஒரு பாடசாலை நூலகக்குழுவின் ஆலோசனையின் பேரிலேயே வழங்கப்படும்.

**National Digitization Project**

*National Science Foundation*

Institute : National Library and Documentation Services Board

1. Place of Scanning : National Library and Documentation Services Board, Colombo 07
2. Date Scanned : 2017/11/01
3. Name of Digitizing Company : Sanje (Private) Ltd, No 435/16, Kottawa Rd, Hokandara North, Arangala, Hokandara
4. Scanning Officer

Name : N.D.R. Gamage

Signature : ...

Certification of Scanning

*I hereby certify that the scanning of this document was carried out under my supervision, according to the norms and standards of digital scanning accurately, also keeping with the originality of the original document to be accepted in a court of law.*

Certifying Officer

Designation : Library Documentation Officer

Name : Iromi Wijesundara

Signature : ...

Date : 2017/11/01

*"This document/publication was digitized under National Digitization Project of the National Science Foundation, Sri Lanka"*

fi